செய்தி வெளியீடு எண்: **101** நாள்: **23.11.2021**

## மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மாநிலத்திலுள்ள அனைத்து ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப் பள்ளிகளின் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுடன் கலந்துரையாடினார்

மாண்புமிகு ஆளுநர் அவர்கள் புகழ்பெற்ற சுதந்திரப் போராட்ட வீரர் பகவான் பிர்சா முண்டாவின் திருவுருவப் படத்துக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

இந்திய தேசிய சுதந்திர போராட்டத்தில் பழங்குடியினத் தலைவர்கள் ஆற்றிய பங்களிப்புகள் மற்றும் தியாகங்களை நினைவுகூரும் வகையில் பழங்குடியினர் பெருமை வார கொண்டாட்டங்களின் தொடர்ச்சியாக, மாண்புமிகு ஆளுநர் திரு. ஆர். என். ரவி அவர்கள் தமிழகத்தில் உள்ள எட்டு ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப் பள்ளிகளின் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுடன் ஆளுநர் மாளிகையில் சிறந்த ஆர்வமூட்டும் வகையிலான கலந்துரையாடலில் கலந்துகொண்டார்.

இந்நிகழ்வில், கல்வி, பணி மேம்பாடு, மற்றும் தேசத்தை கட்டமைத்தல் உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் மாணவர்கள் வினா தொடுத்தனர்.

மாண்புமிகு ஆளுநர் அவர்கள் மாணவர்கள் உயர்ந்த சிந்தனையுடன் கூடிய பெரிய கனவுகளை காண வேண்டுமெனவும், அவர்களின் கனவை நனவாக்க கடினமாக உழைக்க வேண்டுமெனவும் வலியுறுத்தினார். மேலும் மாணவர்கள் சமூகத்தில் உள்ள ஏழைகளுக்கு உதவியாக இருக்க வேண்டும் என்றும், சவால்களை வளர்ச்சிக்கான வாய்ப்புகளாகப் பார்க்கும்படியும், வாழ்க்கையில் உயர்ந்த இலட்சியங்களை வகுத்துக் கொண்டவர்களாய், தடைகளை தாண்டிச் செல்ல வேண்டுமெனவும் அவர் அறிவுறுத்தினார். புத்தகம் படிக்கும் பழக்கத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

மாண்புமிகு ஆளுநர் அவர்கள் மாணவர்களுக்கு உத்வேகமளிக்கும் ஆதாரமாக ஆசிரியர்கள் இருக்க வேண்டும் என்றும், மாணவர்களின் கனவுகள் மற்றும் விருப்பங்களை ஆசிரியர்கள் தூண்ட வேண்டும் என்றும் ஆசிரியர்களைக் கேட்டுக் கொண்டார். மாணவர்களை ஆலமரத்தின் விதையுடன் ஒப்பிட்ட ஆளுநர்,

ஆசிரியர்கள் மாணவர்களுக்கு சரியான முறையில் ஊக்கமளிக்கும் போது, அவர்கள் மேன்மைப்பெற்று புகழின் உச்சத்தை எட்டுவார்கள் என்று குறிப்பிட்டார்.

ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப் பள்ளிகளில் பயின்ற, சிறந்த முன்னாள் மாணவர்களுடன் மாதந்தோறும் கலந்துரையாடல் நிகழ்ச்சிகளையும், ஊக்கமளிக்கும் உரைகளையும் நிகழ்த்த வேண்டும் என்றும் அத்தகைய நிகழ்வுகளை அவர்களுடைய வழக்கமான அலுவல்களின் ஒரு பகுதியாக அமைத்துக் கொள்ள வேண்டுமெனவும் அப்பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களிடம் மாண்புமிகு ஆளுநர் அவர்கள் வலியுறுத்தினார்.

இந்த நிகழ்வின் போது, ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள், தங்களுடைய பள்ளியின் செயல்பாடுகள் மற்றும் சாதனைகள் குறித்து சுருக்கமாக எடுத்துரைத்தனர். மாண்புமிகு ஆளுநர் அவர்கள் பள்ளி நூலகங்களுக்கு புத்தகங்களை வழங்கினார். அவற்றை 8 பள்ளிகளின் மாணவர்கள் மற்றும் தலைமையாசிரியர்கள் பெற்றுக்கொண்டனர். மாண்புமிகு ஆளுநர் அவர்கள் மாணவர்கள் மற்றும் தலைமை ஆசிரியர்களுடன் மதிய உணவு அருந்தினார். பின்னர் மாணவர்கள் ஆளுநர் மாளிகையைச் சுற்றிப்பார்த்தனர்.

பழங்குடியினர் மேம்பாடு மற்றும் சமூக - பொருளாதாரத்திற்காக மத்திய மற்றும் மாநில அரசுகள் எடுத்துள்ள முயற்சிகள் குறித்து பழங்குடியினர் நலத் துறை இயக்குநர் திரை உரை விளக்கக்காட்சியின் உதவியுடன் விவரித்தார்.

இந்நிகழ்வில் திரு. ஆனந்தராவ் வி. பாட்டில் இ.ஆ.ப, ஆளுநரின் செயலாளர், வி.சி.ராகுல், இ.வ.து, பழங்குடியினர் நலத்துறை இயக்குநர், பழங்குடியினர் நலத்துறை உயர் அதிகாரிகள் மற்றும் ஆளுநர் மாளிகையின் ஏனைய அலுவலர்கள் கலந்து கொண்டனர். திரு. சிவ. சு. சரவணன், கூடுதல் இயக்குநர் (மக்கள் தொடர்பு), ஆளுநர் மாளிகை, நன்றியுரை தெரிவித்தார்.

…………………………………………………………………………………………………………

ஆளுநர் மாளிகை, சென்னை- 22 ஒம்/--

நாள்: 23.11.2021 கூடுதல் இயக்குநர்(ம.தொ)

**Press Release No : 101** **Date: 22.11.2021**

**Hon'ble Governor of Tamil Nadu held interaction with Students and teachers of all the Eklavya Model Residential Schools in the State**

Hon'ble Governor paid floral tributes to the portrait of Bhagwan Birsa Munda the renowned freedom fighter.

In continuation of Jan Jatiya Gaurav Saptah celebrations to commemorate the contributions and sacrifices of the tribal leaders in the National freedom moment of India, Hon'ble Governor Thiru. R. N. Ravi held an extensive and interesting interactions with the students and teachers of all the eight Eklavya Model Residential Schools in Tamil Nadu today November 22nd at Raj Bhavan.

The students raised questions on various subjects which included education, career development and nation building.

Hon'ble Governor urged to the students to dream big and work hard to achieve their dream. Also to be helpful to the needy in the community. He exhorted them to look at challenges as opportunities for growth. He advised the students to keep pushing their limits, framing higher aims in life. He also urged them to develop book reading habit.

Hon'ble Governor asked the teachers to be a source of inspiration for the students and they should ignite their dreams and aspirations among the students. He likened the students to a banyan tree seed, which could touch the pinnacle of excellence and brilliance if nurtured properly by the teachers.

Hon'ble Governor urged the Head Masters of Eklavya Model Residential schools, to hold monthly interactive and motivational

sessions for students with eminent alumnus of their schools and also emphasised on making such event a part of their regular affairs.

During this occasion, the Head Masters of Eklavya Model Residential schools, gave a brief account of their school's activities and achievements. Hon'ble Governor also presented books to the school libraries, which were received by the students and Head Masters of 8 schools. Hon'ble Governor had lunch with the students and Head Masters. Later the students had tour of Raj Bhavan.

The Director, Tribal Welfare Department has briefed with the powerpoint presentation on the initiatives taken by the Central and the State Governments for the upliftment and socio-economic of the Tribal people.

On this occasion Thiru. Anandrao V. Patil IAS, Secretary to Governor, V.C. Rahul IFS, Director of Tribal Welfare Department, senior officials of Tribal Welfare Department and other officials of Raj Bhavan were present. The Vote of Thanks was delivered by Thiru. S.S. Saravanan, Additional Director, Public Relations, Raj Bhavan.

---

Raj Bhavan, Chennai – 22 Sd/-

Date : 22.11.2021 Addl. Director (PR)